MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8 / MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

பெண்களின் மனநிலையை வெளிப்படுத்தும் வாய்மொழிப் பாடல்கள் (ஏட்டில் வராதவை)

முனைவர் ரெ.சுப்புலட்சுமி (M.A, M.Phil, B.Ed, UGC(NET), D.L, Ph.D)
ஓவிய ஆசிரியர், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, சூலூர்
கோயம்புத்தூர் - 641402, தமிழ்நாடு
மின்னஞ்சல் முகவரி: subbulakshmisri1968@gmail.com
அலைபேசி எண் : 9442979006.

Oral Songs Expressing the Mindset of Women (Unpublished/Unwritten)

Dr. R. Subbulakshmi, (M.A, M.Phil, B.Ed, UGC(NET), D.L, Ph.D)
Drawing Teacher, Government Girls Higher Secondary School, Coimbatore, Tamil Nadu,
Email ID: subbulakshmisri1968@gmail.com
ph. No: 9442979006.

Abstract

This study examines the poignant portrayal of women's struggles and maternal longing through traditional folk songs, focusing on the intricate mother-daughter relationship. These songs, recorded through oral tradition and word of mouth, reveal emotional turmoil faced by women in rural societies, particularly after marriage. Lyrical narratives uncover themes of separation, hardship, and the quest for support.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

The folk songs analyzed in this study are not derived from written texts or books, but rather from oral recordings of traditional songs passed down through generations. This qualitative analysis demonstrates the power of folk music in expressing women's emotions and struggles.

Keywords: Folk songs, oral tradition, women's struggles, maternal longing, rural societies, emotional turmoil.

ஆய்வுச் சுருக்கம்

முன்னுரையில் மனித வாழ்வில் பெண்கள் சந்திக்கின்ற இன்னல்களையும், மகளின் துயரினைக் கண்ட தாயின் மனநிலையையும், வெளிப்படுத்துகின்ற வாய்மொழிப் பாடல்களை ஆய்வுலகிற்கு எடுத்துக்காட்டுவதாகக் கூறப்பட் செய்தி இடம் பெற்றுள்ளது.

திருமணமான பெண்ணின் இல்லற வாழ்வு எக்காரணங் கொண்டும் சீர் குலைந்துவிடக் கூடாது என்ற உயரிய நோக்கில் பெற்றோர்கள் கவனமாக இருந்துள்ளதனை, ஒரு பெண் பிறந்த வீட்டின் நிலையினைக் காட்சிப்படுத்திய வாய்மொழிப் பாடலின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது,

இல்லற வாழ்விலிருந்து பிரிந்து வந்த பெண்ணை, கரக்காய் அரிசி (கறுப்பு அரிசி) போலவும், தவிட்டுக் குறுணை போலவும் புறக்கணித்தபோது, அப்பெண் தன்னிலையைக் காட்சிப்படுத்திய வாய்மொழிப்பாடல் இடம் பெற்றுள்ளது.

ஒரு பெண் கணவனை இழந்த பின்பு அப்பெண்ணிற்குச் செய்கின்ற சம்பிரதாயங்களின்போது, மகளின் துயர நிலையைக் கண்டு பெற்ற தாய் மனந்துடித்து, கிராமங்களில் பறந்து திரிகின்ற பறவைகளின் வாழ்வினோடு ஒப்பிட்டுப் பாடிய வாய்மொழிப் பாடல் விளக்கப்பட்டுள்ளது. மனித வாழ்வில் நாளும், கோளும் முக்கியத்துவம் பெறுகின்ற வகையில் வினவிய செய்தியும் இடம் பெற்றுள்ளது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

மனிதர்கள் தவறுகளைச் செய்த பின்பு வருந்துவது போல இறைத் தொண்டினால்கூட தன்னுடைய தீவினைகளும், பாவங்களும் அகலாது எனத் தன்னைத் தானே நொந்து கொள்கின்ற பாடல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

கிளிகள் சொன்னதைச் சொல்லுவது மட்டுமல்ல. சொல்லுவதனைப் புரிந்து கொள்ளும் ஆற்றலும் படைத்தவை என்பதனைப் புலப்படுத்துகின்ற பாடல் விளக்கப்பட்டுள்ளது.

முடிவுரையில் ஆய்வின் முடிவு கூறப்பட்டுள்ளது.

திறவுச்சொற்கள் : நாட்டுப்புறப்பாடல்கள், வாய்மொழி மரபு, பெண்களின் போராட்டங்கள், தாய்மையின் ஏக்கம், கிராமப்புற சமூகங்கள், உள்ளுணர்வுத்தாக்கம்.

முன்னுரை

உலக உயிரினங்களில் பறவைகளும் விலங்குகளுங் கூட அவைகள் பெற்ற உயிரினங்களைப் பாதுகாக்கத் துடிக்கின்றன என்பதனை உலகறியும், அவ்வகையான உயிரினங்களில் மேம்பட்ட உயிரினமாகக் கருதப்படுகின்ற மனிதர்கள் இறுதி மூச்சுவரை குடும்ப நலனுக்காகப் பாடுபடுகின்றனர். அத்தகைய குடும்ப உறவில் தொப்புள் கொடி உறவாக இருக்கின்ற தாய், சேய் உறவு இன்னவென்று மதிப்பிட முடியாத உயரிய நிலையில் உள்ளது. அதிலும் தாய், மகள் என்ற உறவில் திருமணம் வரை தாயின் அரவணைப்பில் வளர்ந்த மகள் திருமணத்திற்குப் பின் தாயைப் பிரிந்து, வாழ வேண்டிய சூழல் ஏற்படுகின்றது.

அவ்வாறு வாழ்கின்ற போது, தாயிடமிருந்து பிரிந்து தனித்த குடும்ப வாழ்வினைத் தொடங்கிய மகள் எதிர்பாராத இன்னல்களைச் சந்தித்த போது மனம் நொந்து கூறியவையும், மகளின் வாழ்வில் ஏற்பட்ட

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

துயரத்தினைக் கண்ட தாயின் மனநிலையையும், தாய், மகள் ஆகிய இருவரின் நிலையைக் கண்டு உற்றார் உறவினர் மனங்கலங்கி வினவியதும் வாய்மொழிப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. ஏட்டில் வராத பாடல்களை ஆய்வுலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

முதலில் பெண்களின் துயரங்களில் ஒரு பெண்ணிற்கு பிறந்த வீடு கூட அந்நியமாதலை உணர்த்தும் வாய்மொழிப் பாடல் இடம் பெறுகின்றது.

தங்கப்படிக் கிணறு
தாகத்துக்கு நல்ல தண்ணி
நீங்க பெத்த பெண்ணுடி
தவிச்சா வருவேன்னு
நீங்க தலையாரி காவலிட்டீர்
வெள்ளிப் படிக் கிணறு
வேனலுக்கோ நல்ல தண்ணி
நீங்க பெத்த பெண்ணுடி
வெறுத்தா வருவேன்னு
வேடுவரைக் காவலிட்டீர்!

என்ற இப்பாடல் மூலம் அறியலாம். பொதுவாக கிராமங்களில் வீட்டுப் பெரியவர்கள் பள்ளியில் சேர்த்த குழந்தையை அழுகிறது என்று கூட்டிட்டு வந்துவிட்டால் குழந்தையின் படிப்பு என்னாவது என்றும், திருமணமான பெண்கள் புகுந்த வீட்டில் கஷ்டம், நஷ்டம் என்று ஓடி வந்துவிட்டால் குடும்பம், குழந்தைகள் என்னாவது என்றும் திட்டுவது உண்டு. இருப்பினும் ஒரு பெண் இல்லற வாழ்வில் ஏற்பட்ட பிரச்சினைகளை (இடர்பாடுகளை) எதிர்கொள்ள முடியாமல் வாழ்வினை வெறுத்து, செல்வ வளமிக்க பிறந்த

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

வீட்டிற்கு வருகின்ற பொழுது அன்பினால் அரவணைக்காமல் பெண்ணின் இல்லறம் சீர்குலைந்துவிடக் கூடாதே என்ற உயரிய நோக்கில் பெற்றோர்கள் கவனமாக இருந்துள்ளதனர்.

திருமண வாழ்வில் பெண்ணின் நிலை

மனிதர்களின் வாழ்க்கைப் பயணத்தில் திருமண வாழ்வு மிக முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. அத்திருமண வாழ்வில் ஆணின் வாழ்வு முடிவடையும்போது, பெண்ணின் நிலைமையை இன்னவென்று சொல்ல முடியாது. அந்நிலையில் பெண்ணை கண்மாய்க்கரையில் வைத்தும், தெருவோரத்தில் (முச்சந்தியில்) நிற்க வைத்தும் சில சம்பிரதாயங்களைச் செய்வர். அப்பொழுது மகளின் துயர நிலையைக் கண்ட தாய் சொல்லொணாத் துயரில், இயற்கைச் சூழலில் பறந்து திரிகின்ற பறவைகளுக்குக்கிட்டிய வாழ்வு கூட தான் பெற்ற மகளுக்கு கிட்டவில்லையே என்ற ஏக்கத்தில்,

காக்கா கருங் குருவி
கனிஞ்ச பழம் திங்கையிலே
காணியாள பிறந்த மக
கரையோரம் நிக்க லாச்சு
சிட்டும் செம் பருத்தும்
சிவந்த கனி திங்கையிலே
சீமையாள பிறந்த மக
தெருவோரம் நிக்க லாச்சு.

என பாடிய பாடலில் மனங்கலங்கி புலம்பி அழுதக் காட்சியினை உணரலாம்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

தாய், மகளின் துயரினைக் கண்ட உற்றார் உறவினரின் நிலை

மனித வாழ்வில் ஒரு சறுக்கல் ஏற்படும்போது, அதற்கான காரணம் இதுவோ, அதுவோ எனப் பல கோணங்களில் யோசிப்பதுண்டு. அவ்வகையில் தாய், மகளின் நிலையைக் கண்டு கூடி நின்ற உற்றார் உறவினர் மனங்கலங்கி காரணங்களை ஆராய்கின்றனர். அப்போது சுக்கும், சுண்ணாம்பும் வெப்பம், சூரியனும் வெப்பம் அவ்வாறிருக்க பெண்ணிற்கு முகூர்த்தம் குறிக்கும் வேளையிலே சுக்கால் தரை முழுகி, சுண்ணாம்பால் கோலமிட்டு சூரியனை ஆணையிட்ட காரணத்தினால் சூரியன் பெண்ணிற்கு சுளி கிரகம் என்று சொல்லிவிட்டாரோ என மனதிற் எண்ணிய காரணத்தினை வினவும் வகையில்,

முக்காலி மேலே யிருந்து
நீ பெத்த பிள்ளைக்கு
முகூர்த்தம் குறிக்கும் வேளையிலே
சுக்கால் தரை முழுகி
சுண்ணாம்பால் கோல மிட்டு
நீங்க சூரியரை ஆணையிட
நீ பெத்த பெண்ணடிக்கு
சுளி கிரகம் என்றாரோ?

என்ற இப்பாடலில் அமைந்துள்ளதனை அறியலாம். சுளி (புதை குழி) நீர் நிலைகளில் இருக்கக் கூடிய சுளி கண்ணுக்குத் தெரியாது. ஆனால் மாட்டிக் கொண்டால் உயிர் தப்ப முடியாது என்பர் பெரியோர். அதுபோல் சுளி கிரகத்தினால் பெண்ணின் வாழ்வு சீர்குலைந்து விட்டதோ என்ற ஐயப்பாட்டில் அமைந்துள்ள கருத்தாகக் கருத முடிகின்றது.

அடுத்து சாந்தும், சந்தனமும் குளிர்ச்சி. சந்திரனும் குளிர்ச்சி. அவ்வாறிருக்க சாந்தால் தரை முழுகி, சந்தனத்தால் கோலமிட்டு நாள்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

குறிக்கும் நாளிலே சந்திரரை ஆணையிட்ட காரணத்தினால் பெண்ணிற்கு சனி கிரகம் என்று சொல்லிவிட்டாரோ என மனதிற் தோன்றிய காரணத்தினை ஆராய்ந்து,

நாற்காலி மேலே யிருந்து
நீங்க நாள்குறிக்கும் நாளையிலே
சாந்தால் தரை முழுகி,
சந்தனத்தால் கோல மிட்டு
நீங்க சந்திரரை ஆணையிட
சந்திரரும் கூட யிருந்து
நீ பெத்த பெண்ணடிக்கு
சனி கிரகம் என்றாரோ?

என வினவியதனை இப்பாடலின் மூலம் அறியலாம். அவன் என்ன செய்வான். அவைனைப் பிடித்த சனி அவனை அப்படி ஆட்டிப் படைக்கிறது என்பர். அதுபோல் சனி கிரகத்தினால் பெண்ணின் வாழ்வு பாழாகிவிட்டதோ என்ற ஐயப்பாட்டில் அமைந்த பாடற்கருத்தினை அறியலாம்.

இயற்கைக்கு மாறாக மனிதர்கள் செயல்படும்போது இன்னல்களைச் சந்திக்க நேரிடுகின்றது என்பதனை உணர்த்துவதாகவும் எண்ணத் தோன்றுகிறது.

இல்லற வாழ்விலிருந்து பிரிந்து வந்த பெண்ணின் நிலை

இல்லற வாழ்விலிருந்து பிரிந்து வந்த பெண் சமுதாயத்தில் தனக்கிருந்த நிலையினை எண்ணித் துயருற்றுப் பாடியதனை,

ஆரைங்கா நெய்ச்சம்பா நான்
அவிக்கையிலே நயம்சம்பா
அவிக்கையிலே சிக்காம
அரிசி தவிடானே இன்னிக்கு
அனைவருக்கும் சொல்லானே!

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

என்ற இப்பாடல் மூலம் அறியலாம். அதாவது நயம் சம்பா நெல்லானாலும் அவிக்கையில் சிக்காதபோது அந்நெல் அரிசியானது கரக்காய் அரிசியாகி (கறுப்பு அரிசி) உண்பதற்குப் பயனற்றுப் போகின்றது. பயனற்ற அரிசியினை குப்பையில் போடுவது போல வாழ்நாளில் இல்லறத்திலிருந்து பிரிந்து வந்த பெண்ணை நற்காரியங்களின்போது கரக்காய் அரிசியை ஒதுக்குவது போல் ஒதுக்கி வைத்துப் பேசுவதனைக் குறிப்பிடும் வகையில் இவ்வாய் மொழிப்பாடல் அமைந்துள்ளதனை அறியலாம்.

அடுத்து வயலில் சரிவர விளையாத நெல்லினை சாவி நெல் என்பர். நெல்லோடு இருக்கின்ற அந்நெல்லினைக் குத்தும்போது சிக்காமல் இறுதியில் குறுணைத் தவிடாகிப் பயனற்றுப் போய்விடும். அட்சதைக்கு முழு அரிசி எடுத்துக் கொண்டு, குறுணையை ஒதுக்கி விடுவது இயல்பு. அத்தகைய நிலைக்குத் தள்ளப்பட்டதனை,

கோரைங்கா நெய்ச் சம்பா
குத்துறதுக்கு நயம் சம்பா
குத்தையிலே சிக்காம
குறுணைத் தவிடானே நம்
கொடிவழிக்கும் சொல்லானே!

என்ற இப்பாடலில் வெளிப்படுத்தியதனை உணரலாம்.

ஒரு பெண் தன்னைத்தானே நொந்து கொண்ட நிலை

இறைவனைச் சரணடைகின்றபோது பாவ வினைகள் தூசாகிவிடும் என்பது ஆன்றோரின் வாக்கு. அப்படியிருந்தும் ஒரு பெண் இறைத்தொண்டு செய்தால் கூட தன பாவ வினைகள் தொலையாது என்று மனத் துயருற்றுக் கூறியதனை,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

பழனி மலை கந்தனுக்குப்
படிக் கழுவி பூவெடுத்து
பந்து பந்தா மாலைகட்டி
நா பகல் பூஜை செய்தாலும்
என்னோட பாவம் தொலையாது,
திருச்செந்தூர்க் கந்தனுக்குச்
செடியிலே பூ எடுத்து
செண்டு செண்டா மாலைகட்டி
சிவபூசை செய்தாலும்
என்னோட தீவினைகள் தீராது.

என்ற வாய்மொழிப் பாடல் வெளிப்படுத்துகின்றது எனலாம். அதாவது காசி, இராமேசுவரம் போனாலும் நீ செஞ்ச பாவம் தொலையாதுடா என்று கூறுவது போல இப்பாடல் தன் தவற்றை உணர்ந்த நிலையில், தன்னைத் தானே நொந்து கொள்கின்ற மனநிலையினை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது எனலாம்.

தாயை இழந்த பெண்ணின் நிலை

பொதுவாக கிராமங்களில் ஒரு ஊரில் இருந்து இன்னொரு ஊரின் அமைவிடத்தினைக் குறிப்பிடும் போது தோராயமாக ஏழெட்டு மைல் இருக்கும் என்பர். அதேபோல திருமணமாகி வெகுதொலைவில் அதாவது எட்டு, பத்து மலைகளுக்கு அப்பால் இல்லறம் நடத்துகின்ற பெண் தன் தாயை இழந்த பின்பு தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகின்ற வாய்மொழிப் பாடல்கள் பின்வருமாறு

எட்டு மலைக்கு அப்பாலே
இனிக்கும் கனி யிழந்தேன்
இன்பமுள்ள தாயை இழந்தேன்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

எட்டு மலைக்கு அப்பாலே
ஈசுவரியாள் நந்தவனம்
ஈசுவரியாள் இடம் தேடி
என்னோட உண்மைகளைச்
சொல்லி அழுதா இன்னிக்கு
உலகம் எல்லாம் சேர்ந்து அழுகும்.

என்றும்,

பத்து மலைக்கு அப்பாலே
பழுக்கும் கனி யிழந்தேன்
பாசமுள்ள தாயை இழந்தேன்
பத்து மலைக்கு அப்பாலே
பார்வதி யாள் நந்தவனம்
பார்வதி யாள் இடம் தேடி
என்னோட பாதர வைச்
சொல்லி அழுதா இன்னிக்கு
பட்டணம் எல்லாம்
சேர்ந்து அழுகும்.

என்ற இப்பாடல்கள் பெற்ற தாய் முதுமையின் காரணமாகப் பிரிந்தாலும் அப்பிரிவினை ஆற்ற முடியாமல் ஒவ்வொரு பெண்ணும் மனந்துடித்து அத்தாயின் அன்பிற்கும், பாசத்திற்கும் ஏங்குகின்ற உலக நிலையினை எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.

கிளிகள் மனிதர்கள் சொல்லும் சொற்கைள் கேட்டுத் திரும்பச் சொல்லும் திறன படைத்தவைகளாக இருப்பதனால், கிளியைச் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை என்கின்றனர். ஆனால் கிளிகள் மனிதர்கள் கூறுவதனைப் புரிந்து கொள்ளும் திறனும் பெற்றிருக்கின்றன என்பதனை,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

பழனியிலே இரண்டு கிளி
நம்மளோட வாசலுக்கு
பழம் பறிக்க வந்த கிளி
என்னோட பாதரவைக் கேட்டதுனா
பழமும் பறியாது பழனிபோய் சேராது.
இலங்கையிலே இரண்டு கிளி
நம்மளோட வாசலுக்கு
இலை பறிக்க வந்தகிளி
என்னோட இடுக்கங்களைக் கேட்டதுனா
இலையும் பறியாது
இலங்கை போய் சேராது!

என்ற இவ்வாய்மொழிப் பாடல் உணர்த்தியதாகக் கருத முடிகின்றது.

முடிவுரை

நாற்றங்காலில் வளர்ந்த பயிர் வேறொரு இடத்தில் நடப்பட்ட பின்பு பூத்து காய்த்து பயன்தருவது போல ஒரு பெண் பிறந்த வீட்டில் வளர்ந்து புகுந்த வீட்டிற்குச் சென்று இல்லறம் செழிக்கப் பாடுபடுவதன்மூலம் சமுதாயம் சிறப்படைகின்றது.

எனினும் உயிரினங்கள் வாழ்வதற்கு ஆதாரமாக விளங்குகின்ற மண்ணிற்கு உருவாகின்ற துன்பங்களைச் சொல்லி மாளாதது போல, சமுதாயத்தின் ஆணிவேராகக் கருதப்படுகின்ற பெண்களுக்கு உண்டான துன்பங்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இவ்வாய்மொழிப் பாடல்கள் அமைந்துள்ளன எனலாம்.

எனவே தான் மண்ணின்றி உயிரினங்கள் இல்லை. பெண்ணின்றி சமுதாயம் இல்லை என்ற கருத்து எழுந்துள்ளது. அத்தகைய சமுதாயத்தில் துயருற்ற பெண்களின் மனநிலையை எடுத்துக்காட்டிய பயனை இவ்வாய்வுக் கட்டுரை பெற்றுள்ளதாகக் கருதமுடிகின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

பாடியவர்:

R.Rajalakshmi,

Thulukkankurichi, Guganparai (P.O)

Vembakottai (T.K) Viruthunagar (D.T)

Tamilnadu. India.

Pincode – 626140

தொகுதவர்:

Dr. R. Subbulakshmi,

Sirukkulam,Neththathupatti(P.O)

Sattur(T.K), Viruthunagar.(D.T)

Tamilnadu. India.

Pincode – 626202.